உ
சிவமயம்

# பன்னிரு திருமுறை தோத்திரத் திரட்டு

(விநாயகப் பெருமான், முருகப் பெருமான் தோத்திரங்கள்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பன்னிரு திருமுறை தோத்திரத் திரட்டு

(விநாயகப் பெருமான், முருகப் பெருமான் தோத்திரங்கள்)




தொகுப்பு :

சிவதொண்டன், திருமுறை வித்தகன்

நா.முருகையா

*ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.*

ஆத்ம ஜோதி தியான மணிமண்டபம், ஏழாலை.

***T.P : 021 491 7840, 077 5818733***


விலை : 70/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளால் சமயகுரவர் நால்வராலும், ஏனைய சைவசமய நாயன்மார் களாலும் பாடப்பட்ட பன்னிரு திருமுறைகளில் விநாயகப் பெருமானையும், முருகப் பெருமானையும் விழித்து கூறப்படும் பாக்களை தொகுத்து பன்னிரு திருமுறைத் திரட்டு வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சைவ அன்பர்கள் இந்நூலைப் பெற்று முருகன் திருப்பணிக்கு உதவுமாறும், விநாயகர், முருகன் திருவருளை பெற்றுய்யுமாறும் வேண்டுகின்றோம்.

இந்நூலை வெளியிட உதவிய அன்பருக்கும் மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டு வெளியிட உதவிய சிவரஞ்சனம் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் முருகன் திருவருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

**வணக்கம்**

**பதிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவசமயத்தில் பிறந்த நாம் பன்னிரு திருமுறைகளை கோயில்களிலும், வீடுகளிலும் ஓதி வருகின்றோம். இத் திருமுறைகளில் விநாயகப் பெருமானையும், முருகப் பெருமானையும் விழித்துக் கூறப்படும் தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராம், பன்னிரெண்டாம் திருமுறைகளையும், திருப்புகழ் ஆகியன வற்றையும் வெளியிட விரும்பி பன்னிரு திருமுறைத் திரட்டு (விநாயகப் பெருமான், முருகப் பெருமான் தோத்திரங்கள்) தொகுத்தேன்.

திருமுறைகளைப் பண்ணிசையுடன் ஓதுவதற்கு எம் சந்ததியினரில் மிகச்சிலரே உள்ளனர். சைவசமயத்தவர்கள் யாபேரும் பண்ணிசையுடன் பாராயணம் செய்யும் பொருட்டு தமிழ் வேதமாகிய இந்நூலைச் சிறந்த முறையில் பேணிப் பாதுகாத்து மற்றவர்களும் பயனடையச் செய்வது நாம் எமது சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் செய்யும் பெரும் தொண்டாகும்.

இந்நூல் பழைய ஏட்டுப் பிரதிகளில் இருந்தும், இந்திய ஆதினங்களினால் வெளியிடப்பட்ட நூல்களில் இருந்தும் தொகுக்கப்பட்டது.

**வணக்கம்**

நா.முருகையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்
# பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லை பொது நடம் போற்றி போற்றி.

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற் குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தி நிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு இராமன தீச்சரம்

**பண் : வியாழக்குறிஞ்சி**

சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்தம தத்தவன் றாதையோதான்
அந்தமில் பாடலோ னழகன்நல்ல
எந்தவ னிராமன தீச்சரமே. 1

## திரு விராகரம்

**பண் : வியாழக்குறிஞ்சி**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடி கணபதிவர வருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 2

## மூதூர் (சீகாழி)

**பண் : பியந்தைக்காந்தாரம்**

கரியின் மாமுக முடைய கணபதி தாதை பல் பூதந்
திரிய வில்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரும் மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்கள் ஏத்து மொலிபுனற் காழிநன் னகரே. 3

## திருஅதிகை வீரட்டானம் (திருக்கெடிலப்புனல்)

**பண் : காந்தாரம்**

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்தாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவீழிமிழலை

**பண் : திருத்தாண்டகம்**

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங் கயாசுரனை
அவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனை முன் சிதைத்தார் போலுந்திசை முகன்றன்
சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்தி தலை யறுத்தார் போலும் வியன்
வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்கமனார் போலு மடியேனை
யாளுடைய மடிகள் தாமே. 5

## திருமுதுகுன்றம்

**பண் : நட்டபாடை**

அருகரொடு புத்தரவ ரறியா அரன் மலையான்
மருகன்வரும் இடபக்கொடி யுடையானிடம் மலரார்
கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சி யது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே. 6

## திரு இராமன தீச்சரம்

**பண் : வியாழக்குறிஞ்சி**

தழைமயி லேறவன் றாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னு காதில்
குழையது விலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமன தீச்சரமே. 7

## திருமீயச்சூர்

**பண் : காந்தாரம்**

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூர் அன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு அரசிற் கரைப்புத்தூர்

**பண் : காந்தாரம்**

வள்ளி முலைதோய் குமரன் றாதை வான் றோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசிற் றென்பாற் சிறைவண்டும்
புள்ளு மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே. 9

## திருச்சக்கரமாற்று

**பண் : காந்தாரம்**

விளங்கிய சீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருமேற் சோலை
வளங்கவரும் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவ மண்மேல்
களங்கமிலூர் சண்பை கமழ் காழிவயங் கொச்சைகழு மலமென்றின்ன
விளங்குமரன் றன்னைப் பெற் றிமையவர் தம் பகை யெறிவித்
திறைவனூரே. 10

## திருகோமூத்திரி

**பண் : காந்தாரம்**

காய்ந்துவரு காலனையன் றுதைத்தவனூர் கழுமலமாத்
தோணிபுரஞ்சீர்
ஏய்ந்தவெங் குருப்புகலியிந்திரனூர் இருங்கமலத் தயனூர் இன்பம்
வாய்ந்தபுற வந்திகழுஞ் சிரபுரம்பூந் தராய்கொச்சை காழிசண்பை
சேந்தனை முன் பயந்துலகில் தேவர்கடம் பகைக்கெடுத் தோன்
திகழுமூரே. 11

## திருநறையூர்ச்சித்தீச்சரம்

**பண் : பியந்தைக்காந்தாரம்**

இடமயி லன்னசாயன் மடமங்கை தன்கை யெதிர்நாணி பூண வரையில்
கடும்அயி லம்புகோத்து வெயில் செற்றுகந்து வமரர்க்களித்த தலைவன்
மடமயில் ஊர்திதாதை யெனநின்று தொண்டர் மனநின்ற
மைந்தன் மருவும்
நடமயி லாலநீடு குயில் கூவு சோலை நறையூரி னம்ப னவனே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகலூர்

**பண் : செவ்வழி**

நேமியானும் முகநான் குடையந்நெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்
சாமி தாதை சரணாகு மென்றுதலை சாய்மினோ
பூமி யெல்லாம் புகழ்செல்வம் மல்கும் புகலூரையே. 13

## திருத்தென்குடித்திட்டை

**பண் : கொல்லி**

ஊறினா ரோசையுள் ளொன்றினா ரொன்றிமால்
கூறினா ரமர்தகுங் குமரவேள் டாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே. 14

## திருப்பிரமபுரம் - திரு வியமகம்

**பண் : பழம்பஞ்சுரம்**

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள்
மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே யமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரமபுரத்தை உகந்தனையே. 15

## விடம் தீர்த்த பதிகம் (பொது)

**பண் : இந்தளம்**

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கச்சி மேற்றளி (பிள்ளை பாளையம்)

**பண் : திருநேரிசை**

மாலன மாயன் றன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுபதியார் பல்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
ஏல நற் கடம்பன் தாதை இலங்குமேற் றளிய னாரே. 17

**பண் : திருநேரிசை**

செல்வியைப் பாகங் கொண்டார் சேந்தனை மகனாகக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
எல்லியை விளங்க நின்றார் இலங்குமேற் றளிய னாரே. 18

## திருப்பெருவேளூர்

**பண் : திருநேரிசை**

குறவிதோண் மணந்த செல்வக் குமரவேள் டாதை என்றும்
நறவிள நறுமென் கூந்த ணங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்றும் வானைப் பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி உணருமா றுணர்த்து வேனே. 19

## பொது

**பண் : தனித்திருநேரிசை**

உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பேரெயில்

**பண் : திருக்குறுந்தொகை**

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனிற் றானோர் தலைமகன்
என்னை யாழும் இறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே. 21

## திருக்கடம்பூர்

**பண் : திருக்குறுந்தொகை**

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 22

## திருக்கோழம்பம்

**பண் : திருக்குறுந்தொகை**

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் றாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே. 23

## திருப்புவனூர்

**பண் : திருக்குறுந்தொகை**

நார ணன்னொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்காட்டுப்பள்ளி

**பண் : திருக்குறுந்தொகை**

அடும்புங் கொன்றையும் வன்னியு மத்தமும்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் றாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னார்க்கோர் உறுதுணை யாகுமே. 25

## திரு அதிகை வீரட்டானம்

**பண் : திருவடித் திருத்தாண்டகம்**

அரவணைத் யான் சிந்தித் தரற்றும்மடி யருமறையான் சென்னிக்
கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி சார்ந்தார்கட் கெல்லாஞ்
சரணாமடி
பரவுவார் பாவம் மறைக்கும் மடி பதினெண் கணங்களும் பாடும்மடி
திரைவிரவு தென் கெடில நாடன்னடி திருவீரட்டானத் தெஞ்
செல்வன்னடி. 26

## திருப்புறம்பயம்

**பண் : திருத்தாண்டகம்**

கோவாய விந்திரனுள்ளிட்டா ராகக் குமரனும் விக்கின விநாய கன்னும்
பூவாய பீடத்துமேல யன்னும் பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய வின்னிசைகள் பாடி யாடிப் பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண்டார்க்கப் புறம்பயநம் மூரென்று
போயினாரே. 27

## திருப்பூவணம்

**பண் : திருத்தாண்டகம்**

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்
பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான் மறையின் ஒலி தோன்றும் நயனந் தோன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமலிந்த கோவணமுங் கீளுங் தோன்று
மூரல் வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே. 28

## திருமறைக்காடு

**பண் : திருத்தாண்டகம்**

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடி மேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நஞ்செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே. 29

## திருவாரூர்

**பண் : திருத்தாண்டகம்**

ஐயன் காண் குமரன்காண் ஆதி யான்காண டன்மழு
வாள்டா னொன்று பியன்மே லேந்து
கையன் காண் கடற்பூதப் படையி னான்காண் கண்ணெரி
யால் ஐங்கணையோனு டல்காய்ந் தான்காண்
வெய்யன்காண் டண்புனல் சூழ் செஞ்சடை யான்காண்
வெண்ணீற்றான் காண்விசயற்கருள்செய் தான்காண்
செய்யன்காண் கரியன்காண் வெளியோன் றான் காண்
டிருவாரூ ரான்கா னென் சிந்தை யானே. 30

## திருநெய்த்தானம்

**பண் : திருத்தாண்டகம்**

மிறைபடுமிவ் வுடல் வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவே னெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை கூத்தாடுங்
குணமுடையான் கொலைவேற் கையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை கழலுந் திருவடிமேற் சிலம்பு மார்ப்ப வவனிதலம்
பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம் நெய்த்தான மென்று நினையுமா
நினைந்தக்கா லுய்ய லாமே. 31

## திருவீழிமிழலை

**பண் : திருத்தாண்டகம்**

சமரம்மிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால் குறைத்த நாதர் போலும்
நாரணனை இடப்பாகத் தடைத்தார் போலுங்
குமரனையும் மகனாக வுடையார் போலுங்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்களின் பின் அமுதுணநஞ் சுண்டார் போலும்
அடியேனை ஆளுடைய வடிகடாமே. 32

## திருக்கச்சியேகம்பம்

**பண் : திருத்தாண்டகம்**

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலை வேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தினாற்குத் தாதைகாண்
தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச் சிவனவன் காண்
செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 33

## திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம்

**பண் : திருத்தாண்டகம்**

காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக் கமலத்திற்
காரணற்குங் காட்சி யொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலும் சிலைவளை
வித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிலங்கு புனலனல்கால் பரமா காசம் பரிதிமதி
சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு வேற்குமரன் றாதை போலுங் குடந்தைக்கீழ்க்
கோட்டத்தெங் கூத்த னாரே. 34

## திருநாரையூர்

**பண் : திருத்தாண்டகம்**

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத் தலைகலனாப்
பலியேற்ற தலைவன் றன்னை
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக் கோணாகம்
பூணாகக் கொண்டான் றன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் றன்னை அறுமுகனோ
டானைமுகற் கப்பன் றன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை நாரையூர்
நன்னகரிற் கண்டேன் நானே. 35

## திரு இன்னம்பர்

**பண் : திருத்தாண்டகம்**

கோழிக் கொடியோன்தன் றாதைபோலுங்
கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலுமுள் குவா
ருள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகரும் தாமே போலும் அடைந்தவர்கட்
கன்பராய் நின்றார் போலும்
எழு பிறவிக்குந் தாமே போலும் இன்னம்பர்
தான்தோன்றி யீச னாரே. 36

## திரு ஓணகாந்தன் தளி

**பண் : இந்தளம்**

திங்கடங்கு சடைக்கண் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கோற் றட்டி யாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளியு ளீரை. 37

## திருத்தினைநகர்

**பண் : தக்கேசி**

வேந்த ராய்உல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்தஇவ் வுடலது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயர்உழந் திடும்இப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையில் ஆட்டுகந் தானைப்
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ முந்தினைச் சென்றடைமனனே. 38

## திருவாரூர்

**பண் : காந்தாரம்**

நமர்பிறர் என்ப தறியேன் நான் கண்டதே கண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பன் றக்கவா றொன்றும் இலாதேன்
குமரன் றிருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரனிருப்பதும் ஆரூரவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 39

## திருநள்ளாறு

**பண் : தக்கேசி**

மறவனை அன்று பன்றிப்பின் சென்ற
மாய னைநால்வர்க் காலின் கீழ் உரைத்த
அறவனை யமரர்க்கரி யானை
அமரர் சேனைக்கு நாயக னான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியும் நள் ளாறனை அமுதை
நாயினேன்மறந் தென்நினைக் கேனே. 40

## திருக்கலய நல்லூர்

**பண் : தக்கராகம்**

பொரும்பலம துடையசுரன் றாராகனைப் பொருது
பொன்று வித்த பொருளினை முன்படைத்துகந்த புனிதன்
கரும்புவில்லின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
கனல் விழித்த கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்
இரும்புனல்வெண் திரைபெருகி ஏலம்இல வங்க
மிருகரையும் பொருதலைக்கும் அரிசிலின் தென்கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில் சூழ் கலயநல்லூர் காணே. 41

## திருத்துருத்தியும், திருவேள்விக்குடியும்

**பண் : நட்டராகம்**

குறவனார் தம்மகள் டம்மக னார்மண வாட்டிகொல்லை
மறவனா ராயங்கோர் பன்றிப்பின் போவது மாயங்கண்டீர்
இறைவனார் ஆதியார் சோதிய ராயங்கோர் சோர்வுபடா
அறவனார் ஆவ தறிந்தோமே நாமிவர்க் காட்பட்டோமே. 42

## திருவதிகைத் திருவீரட்டானம்

**பண் : கொல்லிக் கௌவாணம்**

பொன்னானை மயிலூர்தி முருகவேள் டாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னானை அமரர்கடம் பெருமானைக் கருமானின்
உரியானை அதிகமா நகருள்வாழ் பவனை
என்னானை யெறி கெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோது மிகழ்வன்போ லியானே. 43

## திருநாகைக்காரோணம்

**பண் : கொல்லிக் கௌவாணம்**

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன் றறியா
னெம் பெருமான் இதுதகவோ இயம்பி யருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே ஆகிற்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடனாகைக் காரோணம் மேவியிருந்தீரே. 44

## திருக்கழுமலம்

**பண் : தக்கேசி**

திருத்தினை நகர்உறை சேந்தன் அப்ப னென்
செய்வினை அறுத்திடுஞ் செம்பொனை அம்பொன்
ஒருத்தனை அல்லதிங் காரையும் உணரே
னுணர்வு பெற் றேன்உய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்கும் காணமாட் டாதுவிட் டிருந்தேன்
தருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டு கொண்டு டேனே. 45

## திருவாரூர்

**பண் : தக்கேசி**

ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிருடன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூ ரானை மறக்கலு மாமே. 46

## திருக்கோலக்கா

**பண் : தக்கேசி**

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை
யமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத்
தில்லை அம்பலத் துண்நிறைந் தாடும்
கூத்த னைக்குரு மாமணி தன்னைக்
கோலக் காவினிற் கண்டுகொண்டேனே. 47

## திருமுதுகுன்றம் (நம்பி என்ற திருப்பதிகம்)

**பண் : தக்கேசி**

திங்கள் நம்பிமுடி மேல்அடி யார் பார்
சிறந்த நம்பிபிறந் தஉயிர்க் கெல்லாம்
அங்கண் நம்பியருண் மால் விசும் பாளும்
அமரர் நம்பிகும ரன்முதல் றேவர்
தங்கண ம்பிதேவத் துக்கொரு நம்பி
தாதை என் றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள் நம்பி என்றுன்னை ஆளுடைநம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பி கண்டாயே. 48

## திருப்பொற்சுண்ணம்

**பண் : ஆனந்த மனோலயம்**

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற் சுடர் வைத்துக் கொடியெடுமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 49

## திருவுந்தியார்

**ஞானவெற்றி** **கலித்தாழிசை**

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்றன் தாதைக்கே உந்தீபற. 50

# ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

**பண் : பஞ்சமம்** **திருவிடைக்கழி**

மாலுலாமனந்தந் தென் கையிற்சங்கம்
வவ்வினான் மலை மகண் மதலை
மேலுலாந் தேவர் குல முழுநாளுங்
குமரவேள் வள்ளி தன் மணாளன்
சேலுலாங் கழனித்திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற் கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்னுமென் மெல்லியலிவனே. 51

கோவினைப்பவளக் குழமணக்கோலக்
குழாங்கள் சூழ்கோழிவெல் கொடியோன்
காவனற் சேனை யென்னக் காப்பவனென்
பொன்னை மேகலை கவர்வானே
தேவினற்றலை வன்றிருவிடைக்கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவி நற்பீலிமாமயிலூருஞ்
சுப்பிரமண்ணியன்றானே. 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானமர் பொருது வானவர் சேனை
மடியச் சூர்மார்பிணைத்தடித்தோன்
மானமர் தடக்கை வள்ளறன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில் சூழ்திருவிடைக்கழியிற்
றிருக்குராநீழற் கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குல விளங்களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. 53

கிளையிளஞ் சேயக்கிரிதனைக் கீண்ட
வாண்டகை கேடில் வேற்செல்வன்
வளையிளம் பிறைச் செஞ்சடையரன் மதலை
கார் நிற மாறிரு மருகன்
றிளையிளம் பொழில் சூழ் திருவிடைக்கழியிற்
றிருக்குரா நீழற் கீழ் நின்ற
முளையினங்களிறென்மொய் குழற் சிறுமிக்
கருளுங்கொன் முருகவேள் பரிந்தே. 54

வகைமிகுமசு ரர்மாளவந் துழிஞை
வானமர் விளைத்ததாளாளன்
புகைமிகுமன விற்புரம் பொடிபடுத்த
பொன்மலை வில்லி தன்புதல்வன்
றிகைமிகு கீர்த்தித்திருவிடைக்கழியிற்
றிருக்குரா நீழற் கீழ் நின்ற
தொகை மிகு நாமத்தவன் றிருவடிக்கென்
றுடியிடை மடறொடங்கினனே. 55

தொடங்கினண் மடவென்றணி முடித் தொங்கற்
புறவிதழாகிலுமருளா
விடங்கொளக் குறத்தி திறத்திலு மிறைவன்
மறத்தொழில் வார்த்தையுடையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிடங்கொள்வை திகர் வாழ் திரு விடைக்கழியிற்
றிருக்குரா நீழற் கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிருநயனத்
தறுமுகத்தமுதினை மருண்டே. 56

திருமகன் முருகன் றேவியே லுமையா
டிருமகண் மருமகன் றாயா
மருமகன் மதனன் மாமனே லிமவான்
மலையுடையரையர் தம்பாவை
தருமலி வளனாஞ்சிவபுரன்றோழன்
றனதிசாட்டியக் குடியா
ரிரு முகங்கழன் மூன்றேழு கைத்தலமே
ழிருக்கையிலிருந்த வீசனுக்கே. 57

## திருக்கூத்துத் தரிசனம்

**ஒன்பதாம் தந்திரம்**

ஆறுமுகத்தில் அதிபதி நானென்றுங்
கூறு சமயக் குருபரன் நானென்றுந்
தேறினர் தெற்குத் திரு அம்ப லத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானே. 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்கீரதேவநாயனார் அருளிச் செய்த

# திருமுருகாற்றுப்படை

### திருச்சிற்றம்பலம்

### (திருப்பரங்குன்றம்)

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்
கோவற இமைக்குஞ் சேன்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறு நர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூழ் மாமழை
வாள்போழ் விசும்பின் வள் உறை சிதறித்
தலைப்பெயல் தலை இய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பரா அரை மரா அத்
துருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவை இய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குற்
கைபுனைக் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திரு நுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந் தகட்
டுளைப்பூ மருதின் ஓள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ் நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண் பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தா தப்பிக் காண் வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடுஞ் சோலை
மந்தியும் அறியா மான்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர் முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல் விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
சூழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
குருமுலை அலைக்குங் காதிற் பிணர்மோட்
குருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்தொட் டுண்ட சூழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபே ருருவின் ஒருபே ரியாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவு நீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முட்டாள் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி ஏற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமாஞ் துறைதலும் உரியன் அதா அன்று.

## திருச்சீரலைவாய்

வைந்துதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு பொய்ம் பிற்
கால்கிளர்ந் தன்ன வேழம் மேல் கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரு உம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவை இ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மன்னோர் பெழுதரு வாள்நிற முகனே
மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வாழ
அந்தணர் கேள்வி யோர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருளை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக் கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்
விண்செல்ல மரபின் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய தொருகை
அங்குசங் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை
நீணிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை நரல
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பா றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலை இய பண்பே அதா அன்று.

## திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தின் ரியாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகை முகந் தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பின் எழில் நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய  திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரோ
டொன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீ இயர்
மீன் பூத் தன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெருமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன் அதா அன்று.

## திருவேரகம்

இருமுன் றெய்திய இயல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறு நான் கிரட்டி இளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப்பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலும் உரியன் அதா அன்று.

## குன்று தோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மரா அத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மட; நட மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன் குரல் தொகுதியொடு
குறும் பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்ற தன் பண்பே அதா அன்று.

## பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொரு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்டலைக் கொடியொரு மண்ணியமைவர
நெய்யோ டையவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியோ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டு நர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டான் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண் டாயினும் ஆக காண்டக
முந்து நீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கை தொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழ கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க் கார்த்தும் இசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியார் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமை யோய் எனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் உருவிற் கும்பல் கூளியர்
சாறயர் கறத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல் விளங் குருவின்
வான் றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ உலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலின் நுடங்கி அகில்சுமந்
தார முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரை பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலர் இறால் சிதைய நன்பல
ஆசினி முதுகளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப்பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீ இத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழிவயப்பெடை இரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூ உமயி ரியாக்கைக்குடாவடி உளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா

குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர் தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் – என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத் துறை.

குன்றம் எறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

இன்னம் ஒருகால் என திடும்பைக் குன்றுக்குக்
கொன்ன வில்வேற் சூர்தடிந்த கொற்றவா – முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே.

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில் வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடையே தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவிய நீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் ஆறுமுகவா – பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு – சுருங்காமல்
ஆசையாய் நெஞ்சே அனி முருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

நக்கீரர் தாம் உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் – முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தீரும்.

## தடுத்தாற்கொண்ட புராணம்

### திருமலைச்சருக்கம்

முன்னேவந் தெதிர் தோன்றும் முருகனோ?
பெருகொளியால் தன்னேரில் மாரனோ?
தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடை அண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே! என் மனந்திரித்த இவன் யாரோ என நினைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ திருத்தொண்டர் புராணம்

**இலைமலிந்த சருக்கம்** **கண்ணப்ப நாயனார்**

பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்பேறே
அரியதென் றெவரும் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கற் செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்.

வாரணச் சேவலோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை.

## மும்மையால் உலகாண்டசருக்கம்

**திருக்குறிப்புதொண்ட நாயனார்**

அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோர்
ஆனை நிற்கவும் அரையிருட் டிரியும்
மஞ்சு நீள்வது போலுமா மேனிமலர்ப்ப
தங்களில் வண்சிலம் பொலிப்ப
நஞ்சு பில்கெயிற்றரவவெற் றரையின் நாம
மூன்றிலைப் படையுடைப் பிள்ளை
எஞ்ச லின்றிமுன் திரியவும் குன்றம் எறிந்த
வேலவன் காக்கவும் இசையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மும்மையால் உலகாண்டசருக்கம்

### சண்டேசுர நாயனார்

பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யா

தளிக்கும் புனல்நாட்டு

வாய்ந்த மண்ணித் தென்கரையில் மன்ன

முன்னாள் வரைகிழிய

ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி இமையோர்

இகல்வெம் பகைகடக்கும்

சேந்தன் அளித்த திருமறையோர்

மூதூர் செல்வச் சேய்ஞலூர்.

## வார்கொண்டவனமுலையாள் சருக்கம்

### சிறுத்தொண்ட நாயனார் புராணம்

செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்

உய்ய அமுது செய்யாதே ஒளித்ததெங்கே? எனத்தேடி

மையல் கொண்டு புறத்தணைய மறைந்த அவர்தாம் மலைபயந்த

தைய லோடுஞ் சரவணத்துத் தனயரோடுந் தாம் அணைவார்

கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்

வென்றி நெடுவேல் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்

நின்ற தொண்டர் மனைவியார் நீடுமகனார் தாதியார்

என்றும் பிரியா தேயிறஞ்சி இருக்க உடன் கொண்டேகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமுங் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரது கெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில் காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசை கூற
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல் தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த அதிதீரா
அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு
மடியாரி டைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயு கந்த பெருமாளே.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்கு முக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரனைவதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதற் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுநற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால் கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண் திரு நீறு சிறக்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியா ரெல்லாம்.

**நமப் பார்வதி பதையே**
**ஹர ஹர மகா தேவா**

| | |
|---|---|
| தென்னாடுடைய சிவனே | போற்றி |
| எந்நாட்டவர்க்கும் இறைவா | போற்றி |
| பாராய்த்துறை மேவிய பரனே | போற்றி |
| சீராய்ப்பள்ளி மேவிய சிவனே | போற்றி |

***இன்பமே சூழ்க    எல்லோரும் வாழ்க***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவம்

நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை

நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை

நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை

நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை

பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை

பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை

எல்லாமே பிறர் குழைக்கக் காணுகின்றேன்

என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்.

நன்றி

*இறை பணியில்*
*நா. முருகையா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவரஞ்சனம். 077 3068982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org